வில்லை. ஆகவேதான் அதிகச் சம்பளம் தர இயலவில்லை. அதிக நிதி கிடைக்கும் நேரத்தில் நிச்சயமாக இந்தத் துறை அனுதாபத்துடன் பரிசீலிக்கும்.

(முற்பகல் 10·20)

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அந்த விடுதியிலே பணியாற்றுபவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்று துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. துறை பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், ஊதியக் குழு அதை நிராகரித்துவிட்டிருக்கிறது. ஊதியக் குழு சொல்வதையெல்லாம் ஏற்றுகொள்ளவேண்டுமென்ற கட்டாயம் அரசுக்கு இல்லை. அதேபோன்று ஊதியக்குழு நிராகரித்துவிட்டதையெல்லாம் அரசும் நிராகரிக்கவேண்டும் என்பது அவசியமில்லை, அரசுக்கு நியாயமானது என்று தெரிந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் கொடுப்பது நியாயமானது என்பதை துறை ஏற்றுக் கொள்கிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை என்று சொல் கிறார்கள், அவர்களுக்கு நிதிப் பற்றாக்குறை, நிதியமைச்சருக்கு அதிகாரப் பற்றாக்குறை, முதலமைச்சருக்கு நேரப் பற்றாக் குறை இப்படியே பற்றாக்குறையாக ஒவ்வொன்றும் இருந்தால் நாட்டிலே என்ன நடவடிக்கையை அரசு எடுக்கமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முதலமைச்சர் இருக்கிறார்கள், நிதியமைச்சர் இருக்கிறார்கள். அந்தத் துறையிலே பணியாற்று கிறவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்று துறையே சிபாரிசு செய்திருக்கிறது, ஆனால் ஊதியக் குழு ஏற்றுக் கொள்ளவில்லையென்பதற்காக விட்டுவிடாமல், அமைச்சர் களுக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது, அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

காவேரிப்பட்டினம் தொகுதியில் பாசன வசதி.

*வினா எண். 117 டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா?

(அ) தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் 'ரிவர் பம்பிங் ஸ்டேஷன்' மூலம் தென்பெண்ணை ஆற்றிலிருந்து பாசன வசதியுண்டாக்கும் செயல்திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத் தின்கீழ் (Drought Prone Areas Programme) ரூ. 6.09 இலட்சம் மதிப்பீடு கொண்ட தென்பெண்ணை ஆற்றில் இருந்து

பாசன வசதியுண்டாக்கும் இத்திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 3 இலட்சத்தை அரசு ஏற்கும். மீதமுள்ள ரூ. 3.09 இலட்சம் கிருஷ்ணகிரியில் உள்ள நிலவள வங்கியிடமிருந்து கடனாக பெறப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப்பாசன வசதியை உண்டாக்கும் செயல் திட்டம் எப்போது உருவாக்கப்பட்டது? இதுவரையிலும் அதனுடைய செயல் திட்டத்தில் என்ன நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே இதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அது குண்டலப்பட்டு நீரேற்று கூட்டுறவு சங்கத்தின் மூலம் அமல் செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாராபுரத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி.

*வினா எண் 118 திரு. ரா. அய்யாச்சாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் நகரத்தில் கால்நடை மருத்துவக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.
(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ரா. அய்யாச்சாமி : தாராபுரத்திலே ஒரு கல்லூரி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தக் கல்லூரி கட்ட முடியவில்லையென்றாலும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக் கேள்வியே கால்நடை மருத்துவக் கல்லூரி பற்றியதுதான்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக்கல்லூரி எத்தனை இருக்கின்றன? அந்த இடத்திலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வி இல்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, தாராபுரம் ஒரு பிற்பட்ட வறண்ட பகுதியாகையினால் அங்கே காங்கேயம் இனப்பசுக்களும் மேச்சேரி ஆடுகளும் சிறந்து விளங்குகின்ற